

முத்தமிழறிஞர் – தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து 1981ஆம் ஆண்டில் தீக்குளித்த தியாகி கோயிலடி பிருந்தாவன் நினைவு நாள் நேற்று! இந்நாளையொட்டி அவரது நினைவிடத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. வீரவணக்கம் செலுத்தினார். உடன் பூதலூர் ஒன்றிய செயலாளர் கல்லணை செல்லக்கண்ணு மற்றும் பிருந்தாவன் குடும்பத்தினர் உள்ளார்கள்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உடல் நலக்குறைவால் மறைந்த திரைக்கலைஞர் ரோபோ சங்கர் அவர்களின் இல்லத்திற்கு நேற்று முன்தினம் (19.9.2025) நேரில் சென்று, அவரது திருவுடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினர் மற்றும் கலை உலக நண்பர்களுக்கு ஆறுதல் கூறினார்.

## சேலம் மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றம்!

# 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் வென்றிட உறுதியேற்போம்!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. சிறப்புரை!

சேலம், செப். 21 –

சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், 12.09.2025ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி அளவில் எடப்பாடியில் உள்ள ஸ்ரீ நடராஜா திருமண மண்டபத்தில் சேலம் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ப.தங்கமுத்து தலைமையில், முன்னாள் அமைச்சர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினரும், சேலம் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி சிறப்புரையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் சேலம் மேற்கு மாவட்ட கழக செயற்குழு உறுப்பினர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**சபரீசன் தந்தை வேதமூர்த்தி அவர்களின் மறைவிற்கு இரங்கல் தீர்மானம்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சம்பந்தியும், மரியாதைக்குரிய சபரீசன் தந்தையுமான வேதமூர்த்தி அவர்களின் மறைவு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். அன்னாரது மறைவிற்கு சேலம் மேற்கு மாவட்ட கழகம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

**கழகத்தலைவர் வெளிநாட்டு பயண வெற்றிக்கு வாழ்த்துகளும், பாராட்டுகளும்!**

முதல்வர் அவர்கள் கழகத்தலைவராக பொறுப்பேற்று வெற்றிகரமாக ஏழு ஆண்டுகளை நிறைவு செய்து எட்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றார்கள். முதல்வராக பொறுப்பேற்று 4 ¾ ஆண்டுகளாக ஆட்சியில் செயற்கரிய மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை தீட்டி திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்திய ஒன்றியத்திற்கு வழிகாட்டியாக விளங்குகிறார்கள். கழகத்தலைவர் அவர்கள் முதல்வராக 2021ஆம் ஆண்டு முதல் கடந்த ஆண்டுவரை 922 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 10.63 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வெளிநாட்டு முதலீடுகள் பெற்று தந்து அதன் மூலம் 32.81 இலட்சம் தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்தவர். ஒரு வார அரசு முறை பயணமாக ஜெர்மன் மற்றும் இங்கிலாந்து சென்று 15,516 கோடி முதலீட்டை பெற்று அதன் மூலம் 17613 நபர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்தவர். தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இது வரை 10,78,516 கோடி அந்நிய முதலீட்டை பெற்று 32 இலட்சம் தமிழ்நாடு மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளார்கள். தமிழ் மண், மானம் காத்திட அயராது உழைத்து வெகுவாக அந்நிய முதலீட்டை ஈட்டி தாயகம் திரும்பிய முதர்வர் அவர்களுக்கு சேலம் மேற்கு மாவட்ட செயற்குழு தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

**கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலம் வருவது குறித்து**

இளைஞர்களின் எழுச்சி நாயகன், எதிர்கால தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், கடந்த 2021 சட்டமன்ற தேர்தல் மற்றும் 2024ல் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் கழகம் வெற்றி பெற அயராது உழைத்த தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 2026ல் கழகம் 2.0 வெற்றிப்பெற்று மீண்டும் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைத்திட தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்று பயணம் தொடங்கிவிட்டார். துணை முதல்வர் அவர்கள் வருகின்ற செப்டம்பர் 16ந் தேதி அரசு நிகழ்ச்சிக்காக மாங்கனி நகரமாம் சேலத்திற்கு வருகை தர உள்ளார். செப்டம்பர் 16ந் தேதி சேலம் வருகை தரும் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு சேலம் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிப்பதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**கழக ஆக்கப்பணிகள்!**

கழகத்தலைவர், முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்று தனது கடின உழைப்பால் அறிவார்ந்த திட்டங்களை தீட்டி செயல்படுத்தி தமிழ்நாட்டை இந்திய ஒன்றியத்திலுள்ள மாநிலங்களில் வளர்ச்சி மிக்க முதல் மாநிலமாக உயர்த்தியுள்ளார்கள்.

திட்டங்களை செயல்படுத்தி இத்தகைய மக்கள் நலத்திட்டங்கள் சென்றடையாத குடும்பங்களே தமிழ்நாட்டில் இல்லை என்ற அளவுக்கு திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறார். இத்தகைய திட்டங்கள் தொடர தமிழர் தம் மண், மொழி, மானம் காத்திட வருகின்ற 2026ல் நடைபெற உள்ள **தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிகளை வென்றிட** நமது சேலம் மேற்கு மாவட்டத்திலுள்ள சங்ககிரி, எடப்பாடி, மேட்டூர் சட்டமன்ற தொகுதிகளில் அதிக வாக்குகள் பெற்று கழகம் வெற்றிபெற்று அந்த வெற்றிக்கனியை நாம் அனைவரும் கழக தலைவர் தளபதியார் மற்றும் தமிழ்நாடு துணை முதல்வர் ஆகியோரது பொற்கரங்களில் ஒப்படைக்க உழைப்போம் என உறுதியேற்போம் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



தர்மபுரி கிழக்கு மாவட்டம், நல்லம்பள்ளி சிவாடி ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.31 லட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகம், ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.13,65,000 மதிப்பீட்டில் நியாய விலைக் கடை ஆகிய பணிகளுக்கு தர்மபுரி தி.மு.க. கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார். உடன் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஏ.எஸ் சண்முகம், மாவட்ட துணை செயலாளர் ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர் ஏலகிரி. நட்ராஜ் உள்ளிட்ட தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

# பன்னாட்டுத் தமிழ் ஆளுமையாளர்கள் கூட்டமைப்பு சார்பில் முப்பெரும் விழா!

## அமைச்சர் – மருத்துவர் மா.மதிவேந்தன், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பங்கேற்பு!

*நாமக்கல், செப். 21-*

*பன்னாட்டுத் தமிழ் ஆளுமையாளர்கள் கூட்டமைப்பு சார்பில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆணைகளை வழங்கி வரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவும், கருத்தரங்க ஆய்வு நூலை வெளியிட்டு விழாவும் மற்றும் சிறப்புமிக்க ஆளுமை ஆசிரியர்களுக்கு விருது வழங்கும் விழா என முப்பெரும் விழா. நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே. ஆர்.என். ராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.*

*இந்த முப்பெரும் விழாவில் மாற்றுத்திறனாளிகள், பள்ளி ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதில் 102 மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.*

*மேலும் ஆசிரியர் ராதாக் கிருஷ்ணன் 137 வது பிறந்த நாளை ஒட்டி நாமக்கல், சேலம், மதுரை, திண்டுக்கல், சென்னை, கரூர், திருப்பூர், அரியலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்களை பாராட்டி, விருதுகள் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.*

*விழாவில் பேசிய கே. ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி, உடல் ஊனமுற்றோர்களை மாற்றுத்திறனாளிகள் என அழைக்க வேண்டும் என்று ஆணையைப் பிறப்பித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரது வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு வேலை வாய்ப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கி வருகிறார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மாவட்டம் தோறும் நடைபெறும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில், மாற்றுத்திறனாளிகளுக்கு என ஒரு பிரிவை ஏற்படுத்தி விளையாட்டு போட்டி களில் கலந்து கொள்ள வழி வகை செய்துள்ளார்.*

*இதனையடுத்து ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பேசும் பொழுது..*

*தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வரும் நிலையிலும் அவர்களுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும் என வகையில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் உள்ளாட்சி அமைப்புகளில் நியமன பதவிகளை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கிய ஒரே முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் என்றார்.*

*இந்த முப்பெரும் விழாவில் ராசிபுரம் நகர் மன்ற தலைவர் முனைவர் ஆர். கவிதா சங்கர். நாமகிரிப் பேட்டை ஒன்றிய கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.இராமசுவாமி, மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் டாக்டர் இரா. மாயவன், மாற்றுத்திறனாளி மாநில தலைவர் ரெ.தங்கம், நாமக்கல் நாவுக்கரசு பன்னாட்டு தமிழ் ஆளுமைகள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் பொன். கதிரேசன், மற்றும் பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.*



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 147 வது பிறந்தநாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் பெரியாரின் திருவுருவப் படத்திற்கு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, இனிப்புகள் வழங்கி சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றார். நிகழ்ச்சியில் மாநகர மேயர் சத்யா, பொருளாளர் சுகுமாரன், துணை மேயர் ஆனந்த் அய்யா, பொதுக்குழு உறுப்பினர் எல்லோரா மணி, உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் கோ. சண்முகம்
### செப்டம்பர் 21 (2002)



**திருப்பத்தூர் நகரச் செயலாளர், மாவட்டக் கழக துணைச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் சிறப்புற பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

## தலைமைக் கழகப் பேச்சாளர்

# கோடையிடி குற்றாலம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



*மதுரை, செப். 21-*

*முகவை மாவட்ட நாடக நடிகர் சங்கத் தலைவரும், கமுதி, வேலாங்குளம் எஸ்.கே.ஆனந்தன், எஸ்.கே. இசையரசன் ஆகியோரின் தந்தையும், தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளருமான கோடையிடி குற்றாலம் நேற்று முன்தினம் (19.09.2025 - வெள்ளி) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*அன்னாரது மறைவு செய்தி அறிந்து ஏராளமான கழகத்தினர் அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.*

*அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (20.09.2025 - சனிக்கிழமை) பகல் 12 மணியளவில் கமுதி, காமாட்சி அம்மன் கோவில் தெருவில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா. மீனாட்சிசுந்தரம்
### செப்டம்பர் 21 (2020)



**1954ல் தனது 17வது வயதில் கழகத்தில் இணைத்துக் கொண்ட தீவிர சுயமரியாதைக்காரர்.**

**1970ல் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், ஆலத்தம்பட்டி கிளைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர், நாகை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்தவர்.**

**ஊராட்சி மன்றத் தலைவராக – நகர்மன்றத் தலைவராக – 1971, 1977, 1984 ஆகிய மூன்று முறை வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.**

**1965–ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை புகுந்தவர். 1976ஆம் ஆண்டு மிசா காலத்தில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "மா.மீ" என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். "எப்போதும் கருப்புத் துண்டு அணிந்து கம்பீரமாக உலவிய மா.மீ. அவர்கள் கழகத்தினரிடமும் பொதுமக்களிடமும் மிகுந்த நன்மதிப்புப் பெற்றிருந்தவர்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.